கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2009/2010
(January/February 2013) (வெளிவாரி)

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY

# ECO 201 Micro Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) எல்லைப்பயன் (Mu), மொத்தப்பயன் (Tu) என்பவற்றை வரைபடத்தின் உதவியுடன் வேறுபடுத்தி விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) Z என்னும் நுகர்வோன் கொள்வனவு செய்கின்ற $X, Y$ என்கின்ற இரு வேறுபட்ட பொருட்களது மொத்தப்பயன் சார்பு பின்வருமாறு

$$TU_X = 480X - 20X^2$$
$$TU_Y = 320Y - 40Y^2$$

Z என்பவரது மாதாந்தம் செலவிடக்கூடிய வருமானம் 8800 ரூபாவாகும். $X$ என்னும் பொருளில் ஓர் அலகினை 40 ரூபாவிற்கும் $Y$ என்னும் பொருளை 80 ரூபாவிற்கும் Z கொள்வனவு செய்கின்றார் எனின் பின்வருவனவற்றைக் காண்க.

(i) Z என்பவர் தனது செலவிடக்கூடிய வருமானம் முழுவதையும் $X, Y$ ஆகிய பொருட்களின் கொள்வனவில் செலவிடுவார் எனின் உச்சப் பயனை பெறும் நிலையில் நுகர்வோனின் இரு பொருட்களின் கொள்வனவு சேர்க்கை என்ன?

(05 புள்ளிகள்)

(ii) X பண்டத்தின் விலை 50% ஆல் குறைவடையும் எனின் $Y$ யினது விலை மாறாதபோது புதிய உச்சப்பயன் கொள்வனவு சேர்க்கை யாது?

(05 புள்ளிகள்)

(iii) X பண்டத்தின் கேள்விக் கோட்டினைப் பெறுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02\. (அ) அளவுசார்பயன் ஆய்விற்கும் வரிசைசார்பயன் ஆய்விற்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?

(05 புள்ளிகள்)

(ஆ) சமபயன்வளையி ஒன்றின் பண்புகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) வருமானவிளைவு மற்றும் பதிலீட்டுவிளைவு பற்றிய கிக்ஸ் மற்றும் சுலஸ்கியின் அணுகுமுறைகளை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03.(அ) ஒரு நிறுவனம் அனுபவிக்கும் அகப்புறச் சிக்கனங்கள் எவை? விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தி விரிவுப்பாதை என்றால் என்ன என்பதை விளக்குக.

(04 புள்ளிகள்)

(இ) பின்வரும் ஒவ்வொரு உற்பத்திச்சார்பும் எவ்வகையான அளவுத் திட்டவிதியை உடையது எனக் காட்டுக.

(a) $Q = 20K^{0.6}\ L^{0.6}$

(b) $Q = 100 + 3K + 2L$

(04 புள்ளிகள்)

(ஈ) $Q = AL^{\propto}K^{\beta}$ என்னும் கொப்டக்ளஸ் உற்பத்திச் சார்பினைக் கருதுக. இங்கு,

$Q-$ வெளியீடு, L− ஊழியம், K− மூலதனம் A −மாறிலி ஆகும்.

$MP_L,\ MP_k$ என்பவற்றைக் கணிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04.(அ) நிறைபோட்டிச் சந்தையில் இயங்கும் நிறுவனம் ஒன்றின் குறுங்காலச் சமநிலை எவ்வாறு அடையப்படுகின்றது என்பதை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) விலைபேதப்படுத்தல் என்றால் என்ன எனக் குறிப்பிட்டு அதன் வகைகளை உதாரணத்துடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) தனியுரிமைச் சந்தையில் விலைபேதப்படுத்தல் இடம்பெறத் தேவையான அடிப்படை நிபந்தனைகள் எவையென விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05.(அ) நிலையான செலவுகள் மாறும் செலவுகளை உதாரணங்களுடன் வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

(ஆ) நிறுவனச் சமநிலை என்றால் நீர் கருதுவது யாது?

(06 புள்ளிகள்)

(இ) ஒரு நிறுவனத்தின் கேள்விக்கோடும், மொத்த செலவுக் கோடும் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$40Q = 300 - 2P$$
$$TC \quad = 100 + 40Q$$

மேலேயுள்ள தரவிலிருந்து இன்நிறுவனத்தின் விலை, தொகை, மொத்த வருமானம் இலாபம் நிறுவனச் சமநிலை என்பவற்றைக் காண்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06.(அ) சராசரி உற்பத்திக்கும், சராசரி மாறும் செலவிற்கும் இடையிலான தொடர்பினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) ஒரு தொழிற்சாலையின் உற்பத்தித் தொழிற்பாடு $Q = kL^2$ ஆகும். அத்துடன் செலவுத் தொழிற்பாடு $C = \omega L + rK$ ஆகும். இங்கு $K =$மூலதனம், $L =$ஊழியம் ஆகும் ஊழியத்தின் $(\omega)$செலவானது ரூபா 40 ஆகவும் மூலதனத்தின் $(r)$ செலவானது ரூபா 10 ஆகவும் காணப்படுகின்றது இத்தொழிற்சாலையானது 2000 அலகுகளை வெளியீடு செய்கின்றது எனின் பின்வருவனவற்றை கணிப்பிடுக.

(i) இத்தொழிற்சாலையானது எவ்வளவு ஊழியத்தையும், மூலதனத்தையும் பயன்படுத்துகின்றது என்பதைக் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(ii) இத்தொழிற்சாலையின் மொத்த செலவினைக் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(iii) இத் தொழிற்சாலையானது 2000 அலகிலிருந்து 1800 அலகுகளாக உற்பத்தி வெளியீட்டினைக் குறைப்பதற்கு தீர்மானித்தால் எவ்வளவு ஊழியமும், மூலதனமும் பயன்படுத்தப்படும் என்பதைக் கணிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

07.(அ) மொத்த உற்பத்தி (TC) சராசரி உற்பத்தி (AP) எல்லை உற்பத்தி (MP) என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(05 புள்ளிகள்)

(ஆ) மாறும் காரணி ஒன்றினைப் பயன்படுத்தி நிறுவனம் ஒன்றின் குறுங்கால உற்பத்திச் செயற்பாட்டின் பிரதான கட்டங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) நீண்டகாலத்தில் நிறுவனத்தின் உற்பத்திச் சமநிலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது எனக் காட்டுக.

(ஈ) நீண்ட காலத்தில் சராசரி மொத்த செலவுக் கோட்டின் வடிவத்தை தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

(அ) விலை நுகர்ச்சி வளைகோடு
(ஆ) எல்லை தொழில்நுட்ப பதிலீட்டு வீதம்
(இ) கேள்வி நெகிழ்ச்சி
(ஈ) வெளிவாரி விளைவுகள்
(உ) மிகைக்கேள்வியும் மிகை நிரம்பலும்

(5x4=20 புள்ளிகள்)

***